1984 மார்ச் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 5—3—84 காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12.36 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

2. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

97. தமிழ்நாடு 1949-ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாத்தல் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட விதிகளில் திருத்த மொன்றுசெய்வது குறித்து வன மின்வளத்துறையின் 7—6—1983 ஆம் நாளிட்ட 696 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை தமிழ்நாடு 1949ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாத்தல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1949) 12-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

98. தமிழ்நாடு கரையோரப் பகுதியினின்று கப்பல் துறை சார்ந்த மூன்று மைல்களுக்குள்ளான நீர்பரப்பில் பெரிய வலை வீசி மீன் பிடித்தல் தொடர்பாக வன மீன்வளத் துறை யின் 27—6—1983ஆம் நாளிட்ட 765 ஆம் எண் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு மீன்பிடித்தலை முறைப்படுத்தல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1983) 5 பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப்பெற்றது].

99. சென்னை தொலைகாட்சி நிலையத்திற்குச் சொந்தமான TMW 7757 எண்ணுள்ள வண்டிக்கு 30-6-1981 முதல் 31-12-1981 வரைக்கான காலத்திற்கு செலுத்தக்கூடிய ரூ. 4995 அபராதத் தொகை குறித்து உள் (போக்குவரத்து 1) துறையின் 22—11—1983 ஆம் நாளிட்ட 2444 ஆம் எண் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974)25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

100. திருவாளர்கள் கேரளா சரக்குப்போக்குவரத்து கூட்டுறவு நிறுவனத்திற்குச் சொந்தமான சிலவண்டிகளுக்கு செலுத்தக்கூடிய ரூ. 4,524 அபராதத் தொகை குறித்து உள் (போக்குவரத்து 1) துறையின் 30—12—1983 ஆம் நாளிட்ட 2760 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

[1984 மார்ச் 3

101. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு பணி நடைமுறை நூலின் பகுதி 1-இல் உள்ள தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர்தேர்வாணைக்கழக ஒழுங்குமுறைவிதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து—பணியாளரமைப்பு— நிர்வாகச் சீர்திருத்த (பணியாளரமைப்பு எம்) துறையின் 22—5—1983-ஆம் நாளிட்ட 551 ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

102. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு பணி நடைமுறை நூலின் பகுதி 1இல் உள்ள தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக்கழக ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளரமைப்பு எம்) துறையின் 30—11—1983 ஆம் நாளிட்ட 1136 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

103. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு பணி நடைமுறை நூலின் பகுதி 1இல் உள்ள தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக்கழக ஒழுங்குமுறைவிதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளரமைப்பு எம்) துறையின் 22—6—1983 ஆம் நாளிட்ட 550 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப்பெற்றது].

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

104. வேளாண்மைத் துறையின் 19—1—1979 ஆம் நாளிட்ட /AG/774/79 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 23—11—1983ஆம் நாளிட்ட 1986-ஆம் எண் அரசாணையில் வெளியிட்ட அறிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

105. நெல், மிளகாய், கரும்பு, சர்க்கரை, தேங்காய், முந்திரிப் பருப்பு,வேர்க்கடலை மற்றும் புகையிலை ஆகியவற்றை பொறுத்த மட்டில் கரம்பக்குடி அங்காடியினை சுற்றியுள்ள பதினாறு கிலோ மீட்டர் பரப்பளவினை அறிவிக்கப்பெற்ற அங்காடிப்பகுதியாக

அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 19—11—1983 ஆம் நாளிட்ட 1975 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 23/1959)29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கபெற்றது].

106. சோழன் போக்குவரத்துக் கழகத்தின் 1982 ஆம் ஆண்டிற்கான பதினோராவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

— ஏதுவுமில்லை.—

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS